7

# டால்பின்®

உன்னால் முடியும்

பருவம்

1, 2 & 3

# தமிழ்

புதிய பதிப்பு





100
100
உறுதி

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி விடைக் குறிப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**

DP®
டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

## உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு

# 7

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி**
**விடைக் குறிப்பு அடிப்படையில்**
**தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**


✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com



© All Copyrights reserved


விலை : ரூ.135

# பதிப்புரை

அன்னைத் தமிழை விழைந்து கற்கும் மாணவச் செல்வங்களுக்கு அன்பு வணக்கம். புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட பாடநூலுக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்டுள்ள இவ்வழிகாட்டியை உங்கள் கைகளில் தவழ விடுவதில் பெருமகிழ்வு அடைகிறோம்.

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை மாணவர்களின் அடைவைச் சோதிக்கும் வகையில் கற்றல் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு வினாத்தாள்கள் வடிவமைத்து ஒவ்வொரு தேர்விலும் கேட்கப்பட்டு வருகிறது. இச்சவாலை எதிர்கொள்ள ஏதுவாக இக்கையேட்டில் மீத்திற மாணவர் முழு மதிப்பெண் பெறும் விதமாகவும் மெதுவாகக் கற்போர் எளிமையாக விடையளிக்கும் வண்ணமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு, கற்பவை கற்றபின், ஒரு மதிப்பெண் வினா - விடைகள், குறுவினா, சிறுவினா மற்றும் சிந்தனை வினாக்களுக்கான விடைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கண வினா - விடைகள் மொழிப்பயிற்சிக்கான விடைகளோடு கூடுதல் வினா - விடைகளும் மாணவர் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறும் வகையில் சிறப்பான ஆசிரியர் குழுவைக் கொண்டு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சுயமாக எழுதும் விடைகள் எனத் தரமான தயாரிப்பாக உங்கள் மனம் விரும்பிப் படிக்கும் எழுத்து வடிவத்தில் இக்கையேடு உங்கள் ஆசிரியர்களின் பரிந்துரையோடு உங்கள் தமிழறிவை வளர்க்க வந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி சான்றோனாவதற்கு மேலான முயற்சிகளை மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

> **"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
> **மன்னனின் கற்றோன் சிறப்புடையன்"**
>
> \- மூதுரை

**பாராட்டுகளுடன்**
**டால்பின் பதிப்பகத்தார்**

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | **: 9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | **: 9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | **: 9345330937** |
| வலைதளம் (Website) | **: www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | **: dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

KVB Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wlpos.2753796a@kvb
TID: 2753796A
BHIM UPI

ICICI Bank iMobile · BHIM · pockets
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

G Pay **63743 17883**

CUB CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB
328:SRIVILLIPUTHUR
BHIM UPI

| KARUR VYSYA BANK | CITY UNION BANK |
|---|---|
| A/C No : 1804135000006000 | A/C No : 328109000204092 |
| IFSC CODE : KVBL0001804 | IFSC CODE : CIUB0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |
| **ICICI BANK** | **TAMILNADU MERCANTILE BANK** |
| A/C No : 446005500030 | A/C No : 328150310875103 |
| IFSC CODE : ICIC0004460 | IFSC CODE : TMBL0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பருவம் - 1

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 2 |
| 1. | மொழி | அமுதத்தமிழ் | | 3 |
| | | கவிதைப்பேழை | எங்கள் தமிழ் ✱ | 4 |
| | | | ஒன்றல்ல இரண்டல்ல | 7 |
| | | உரைநடை | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | 10 |
| | | விரிவானம் | ஆளுக்கு ஒரு வேலை (பொம்மலாட்டம்) | 14 |
| | | கற்கண்டு | குற்றியலுகரம், குற்றியலிகரம் | 16 |
| 2. | இயற்கை | அணிநிழல் காடு | | 22 |
| | | கவிதைப்பேழை | காடு ✱ | 23 |
| | | | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | 26 |
| | | உரைநடை | தமிழரின் கப்பற்கலை | 29 |
| | | விரிவானம் | விலங்குகள் உலகம் | 33 |
| | | கற்கண்டு | நால்வகைக் குறுக்கங்கள் | 35 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✱ | 40 |
| 3. | நாடு, சமூகம் | நாடு அதை நாடு | | 43 |
| | | கவிதைப்பேழை | விடுதலைத் திருநாள் | 44 |
| | | உரைநடை | தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் | 48 |
| | | விரிவானம் | கப்பலோட்டிய தமிழர் | 51 |
| | | கற்கண்டு | ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம் | 53 |
| | | மாதிரி தொகுத்தறித் தேர்வு | | 62 |

# பருவம் - 2

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 65 |
| 1. | கல்வி | ஓதுவது ஒழியேல் | | 66 |
| | | கவிதைப்பேழை | அழியாச் செல்வம் ✵ | 67 |
| | | | தேயிலைத் தோட்டப் பாட்டு | 70 |
| | | உரைநடை | வாழ்விக்கும் கல்வி | 74 |
| | | விரிவானம் | பள்ளி மறுதிறப்பு | 78 |
| | | கற்கண்டு | இலக்கியவகைச் சொற்கள் | 81 |
| 2. | கலை, அழகியல் | கலை வண்ணம் | | 87 |
| | | கவிதைப்பேழை | பூத்தொடுத்தல் | 88 |
| | | உரைநடை | பேசும் ஓவியங்கள் | 90 |
| | | விரிவானம் | தமிழ் ஒளிர் இடங்கள் | 93 |
| | | கற்கண்டு | தொழிற்பெயர் | 95 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✵ | 102 |
| | | மாதிரி தொகுத்தறித் தேர்வு | | 104 |

# பருவம் - 3

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 107 |
| 1. | நாகரிகம், பண்பாடு, தொழில், வணிகம் | நயத்தகு நாகரிகம் | | 109 |
| | | கவிதைப்பேழை | விருந்தோம்பல் ✱ | 110 |
| | | உரைநடை | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | 114 |
| | | விரிவானம் | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | 118 |
| | | கற்கண்டு | வழக்கு | 120 |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை | ஒப்புரவு ஒழுகு | | 127 |
| | | கவிதைப்பேழை | புதுமை விளக்கு ✱ | 128 |
| | | | அறம் என்னும் கதிர் ✱ | 131 |
| | | உரைநடை | ஒப்புரவு நெறி | 134 |
| | | விரிவானம் | உண்மை ஒளி | 138 |
| | | கற்கண்டு | இலக்கணம் - பொது | 141 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✱ | 148 |
| 3. | மனிதம், ஆளுமை | மானுடம் வெல்லும் | | 150 |
| | | கவிதைப்பேழை | மலைப்பொழிவு ✱ | 151 |
| | | | தன்னை அறிதல் | 155 |
| | | உரைநடை | கண்ணியமிகு தலைவர் | 157 |
| | | விரிவானம் | பயணம் | 160 |
| | | கற்கண்டு | வினா, விடை வகைகள் | 162 |
| | | மாதிரி தொகுத்தறித் தேர்வு | | 169 |

# பருவம் – 1

# மனப்பாடப் பகுதிகள்

## எங்கள் தமிழ்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாக
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

## காடு

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் - கிளியே
நரியெலாம் ஊளையிடும்

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ - கிளியே
பூங்குயில் கூவுமடீ!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ - கிளியே
இயற்கை விடுதியிலே!

**- சுரதா**

## திருக்குறள்

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

**- திருவள்ளுவர்**

# இயல் ஒன்று

# அமுதத் தமிழ்

P7ZMX




## கற்றல் நோக்கங்கள்

- செய்யுளைப் படித்து அதன் மையக்கருத்தை எடுத்து உரைத்தல்
- பழந்தமிழ் இலக்கியங்களையும் வள்ளல்களையும் பற்றி அறிதல்
- பேச்சுமொழி, எழுத்துமொழியின் நுட்பங்களை அறிதல்
- சொலவடைகளில் பொதிந்துள்ள சமூக உண்மைகளைக் கண்டறிதல்
- குற்றியலுகர, குற்றியலிகரச் சொற்களை அடையாளம் கண்டு அதன் வகைகளை அறிதல்

கவிதைப்பேழை

# இயல் ஒன்று

# எங்கள் தமிழ்

## சொல்லும் பொருளும்

1. **ஊக்கிவிடும்** - ஊக்கப்படுத்தும்
2. **விரதம்** - நோன்பு
3. **குறி** - குறிக்கோள்
4. **பொழிகிற** - தருகின்ற

## நூல் வெளி



இப்பாடலின் ஆசிரியரை, **நாமக்கல் கவிஞர்** என்றும் அழைப்பர். இவர் தமிழறிஞர், கவிஞர், ஓவியர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆளுமைத்தன்மை கொண்டவர். காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் **காந்தியக்கவிஞர்** என்றும் அழைக்கப்படுகிறார். தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர். **மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி** உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

**நாமக்கல் கவிஞர் பாடல்கள்** என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்துத் தரப்பட்டுள்ளது.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **'நெறி' என்னும் சொல்லின் பொருள் ..............**

   அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம் **[அ) வழி]**

2. **'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............**

   அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும் இ) குர + லாகும் ஈ) குர + ஆகும் **[ஆ) குரல் + ஆகும்]**

3. **வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...............**

   அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானெலி **[ஆ) வானொலி]**

## குறுவினா

1. **தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

**தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன**

- நம் தாய்மொழியாம் தமிழ்மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
- அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

---

2. **தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

**தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகள்**

- தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.
- தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

---

## சிறுவினா

1. **'எங்கள் தமிழ்' என்னும் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகள்**

- தமிழ்மொழி, அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
- அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது.
- தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.
- தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.
- கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.
- தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.
- அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.
- தமிழ்மொழி தேன் போன்ற மொழி.

---

## சிந்தனை வினா

**கவிஞர், தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

- உண்ணத் திகட்டாதது தேன்.
- எவ்வளவு நாட்கள் வைத்திருந்தாலும் கெட்டுப் போகாதது.
- தேன் நாவிற்கு இனிமை தருவது போல தமிழைப் பேசும் போதும் இனிமை தரும்.
- எனவே தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார் கவிஞர்.

---

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நாமக்கல் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் ........... **[வெ.இராமலிங்கனார்]**
2. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர் ............ **[வெ.இராமலிங்கனார்]**

## குறுவினாக்கள்

1. **இராமலிங்கனார் ஏன் காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார்?**
   - காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இராமலிங்கனார் காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார்.

2. **இராமலிங்கனார் எழுதிய நூல்கள் 4 கூறுக.**
   - மலைக்கள்ளன்.
   - நாமக்கல் கவிஞர் பாடல்கள்.
   - என்கதை
   - சங்கொலி



கவிதைப்பேழை

# இயல் ஒன்று

# ஒன்றல்ல இரண்டல்ல

## சொல்லும் பொருளும்

1. **ஒப்புமை** - இணை
2. **அற்புதம்** - வியப்பு
3. **முகில்** - மேகம்
4. **உபகாரி** - வள்ளல்

## நூல் வெளி

**பகுத்தறிவுக் கவிராயர்** என்று புகழப்படுபவர் உடுமலை நாராயணகவி. இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ் பெற்றவர். தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர். நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர். இவரது பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.



## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ...............**

   அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி **[இ) பரணி]**

2. **வானில் .............. கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

   அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில் **[ஆ) முகில்]**

3. **'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................**

   அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல

   **[ஈ) இரண்டு + அல்ல]**

4. **'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................**

   அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும் இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும் **[அ) தந்து + உதவும்]**

5. **ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...............**

அ) ஒப்புமைஇல்லாத ஆ) ஒப்பில்லாத இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத **[இ) ஒப்புமையில்லாத]**

## குறுவினா

1. **தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

**தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன**

- தமிழ்நாட்டில் வீசும் தென்றலில் தேன்மணம் கமழும்.
- சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும்.

2. **'ஒன்றல்ல இரண்டல்ல' - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

**'ஒன்றல்ல இரண்டல்ல' - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள்**

- முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடப் புகழ்பெற்றான் வள்ளல் பாரி.
- புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல்.

## சிறுவினா

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகள்**

- பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம்.
- இசைப்பாடலான பரிபாடல்.
- கலம்பக நூல்கள், எட்டுத்தொகை நூல்கள்.
- வான்புகழ் கொண்ட திருக்குறள்.
- அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்கள்.

## சிந்தனை வினா

**தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**

- ஒழுக்க நிலை பிறழும் போதுதான் அற நூல்கள் பிறக்கும்.
- கள்ளுண்ணல், பிறன்மனைப்படுதல், வாய்மை தவறுதல் போன்ற செயல்கள் பெருகிய காரணத்தால் சான்றோர்கள் சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதற்காக நீதி நூல்கள் / அற நூல்கள் இயற்றினர் / இயற்றச் செய்தனர்.

## கற்பவை கற்றபின்

1. **தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**
   - ❖ அதியமான் - ஔவைக்கு நெல்லிக்கனி தந்தவன்.
   - ❖ யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை - ஐங்குறுநூறு தொகுப்பித்தவன்.
   - ❖ பூரிக்கோ - குறுந்தொகையைத் தொகுப்பித்தவன்.
   - ❖ பன்னாடு தந்த மாறன் வழுதி - நற்றிணையைத் தொகுப்பித்தவன்.
   - ❖ சடையப்ப வள்ளல் - கம்பராமாயணம் எழுத உதவியவர்.
   - ❖ சீதக்காதி மற்றும் அபுல்காசிம் - சீறாப்புராணம் எழுத உதவியவர்.
   - ❖ சந்திரன் சுவர்க்கி - நளவெண்பா எழுத உதவியவர்.

2. **தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**
   - ❖ கவிதை, உரைநடை, மரபுக் கவிதை, புதுக்கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல்.
   - ❖ செய்யுள் பாடும் வகையைப் பொறுத்து தூது, உலா, பிள்ளைத்தமிழ், அந்தாதி, கண்ணி, பரணி, மெய்க்கீர்த்தி, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் பல வடிவங்களில் இலக்கியங்கள் உள்ளன.

---

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முகில் என்பதன் பொருள் ........... **[மேகம்]**
2. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் ........... **[உடுமலை நாராயண கவி]**
3. பகைவரை வென்றதைப் பாடுவது ............ இலக்கியம். **[பரணி]**
4. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தவன் ........... **[குமண வள்ளல்]**

### குறுவினாக்கள்

1. **பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் யார்?**
   - ➢ பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் உடுமலை நாராயணகவி.

2. **நீ அறிந்த வள்ளல்களின் பெயர்கள் இரண்டு கூறுக.**
   - ➢ வள்ளல் வேள்பாரி
   - ➢ குமண வள்ளல்

உரைநடை உலகம்

# இயல் ஒன்று

# பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மொழியின் முதல்நிலை கேட்டல், ................ ஆகியனவாகும்.**
   அ) படித்தல் ஆ) பேசுதல் இ) எழுதுதல் ஈ) வரைதல் **[ஆ) பேசுதல்]**

2. **ஒலியின் வரிவடிவம் ................ ஆகும்.**
   அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு **[ஆ) எழுத்து]**

3. **தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று ...............**
   அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம் **[இ) தெலுங்கு]**

4. **பேச்சுமொழியை ............. வழக்கு என்றும் கூறுவர்.**
   அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி **[ஆ) உலக]**

### சரியா தவறா என எழுதுக.

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. **[சரி]**
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **[சரி]**
3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி **[தவறு]**
4. எழுத்து மொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம். **[தவறு]**
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம். **[சரி]**

### பேச்சுமொழி, எழுத்துமொழி பயன்பாட்டின் அடிப்படையில் ஊடகங்களை வகைப்படுத்துக.

**வானொலி, தொலைக்காட்சி , செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்**

| எழுத்துமொழி | பேச்சுமொழி |
|---|---|
| செய்தித்தாள் | வானொலி |
| நூல்கள் | தொலைக்காட்சி |
| மின்னஞ்சல் | திரைப்படம் |

## குறுவினா

1. **மொழியின் இரு வடிவங்கள் யாவை?**

**மொழியின் இரு வடிவங்கள்**

- பேச்சுமொழி
- எழுத்துமொழி

---

2. **பேச்சுமொழி என்றால் என்ன?**

**பேச்சுமொழி**

- வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழி ஆகும்.

---

3. **வட்டார மொழி எனப்படுவது யாது?**

**வட்டார மொழி**

- பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.
- மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.
- இவ்வாறு மாறுபடும் ஒரு மொழியின் வெவ்வேறு வடிவங்களே வட்டாரமொழி எனப்படும்.

---

## சிறுவினா

1. **பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

- பேச்சுமொழி உலகவழக்கு என்றும் எழுத்துமொழி இலக்கிய வழக்கு என்றும் கூறப்படும்.
- பேச்சுமொழியில் சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும், எழுத்துமொழியில் சொற்கள் முழுமையாக எழுதப்படும்.
- உணர்ச்சிக்கூறுகள் பேச்சுமொழியில் அதிகமாகவும் எழுத்துமொழியில் குறைவாகவும் இருக்கும்.
- பேச்சுமொழியில் உடல்மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இடம்பெறும், எழுத்துமொழியில் உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை.

---

2. **கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

- ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்வதும் உண்டு.
- வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படும்.
- அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும்.
- அவ்வாறு உருவாகும் புதிய மொழியைக் கிளைமொழி என்கிறோம்.
- கிளைமொழிகள் இவ்வாறு உருவாகின்றன.

---

## சிந்தனை வினா

**இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

- நேரில் காண இயலாதவற்றைத் தெரிவிக்க எழுத்து மொழி உதவுகிறது.
- மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்கும் எழுத்து மொழியே காரணமாகின்றது.
- மனித உணர்வுகளை வெளிப்படுத்துபவை இலக்கியங்கள்.
- இவை ஒவ்வொரு காலகட்டத்திலும் நாகரீக எல்லைக்குள் மாறலாம்.
- ஆனால் படைப்பு ஒன்று தான்.
- எனவே இலக்கியங்கள் வடிவம் மாறினாலும் உணர்வுகளை வெளிக்காட்டுவதில் ஒன்றுபடுகின்றன.
- இதனால், காலம் கடந்தும் படித்துப் பயன்பெறுவதால் இலக்கியங்கள் வாழ்கின்றன.

---

## தெரிந்து தெளிவோம்

'பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்'. - **மு.வரதராசனார்**

---

பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு மொழி (Diglossic Language) எனப்படும். தமிழில் பழங்காலம் முதலே பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு இருந்துள்ளது. தொல்காப்பியர் இவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்.

---

இக்காலத்தில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் சான்றோர்களின் உரைகள் ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன. இதன் காரணமாகப் பேச்சுமொழியும் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

---

## கற்பவை கற்றபின்

1. **உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்துவழக்குத் தொடர்களை எழுதி வருக.**

(எ.கா.) **பேச்சுமொழி** : அம்மா பசிக்கிது. எனக்குச் சோறு வேணும்.

**எழுத்துமொழி** : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.

- நான் ஒண்ணு கேக்கவா?
  நான் ஒன்று கேட்கவா?
- எனக்கு வவுரு வலிக்குது.
  எனக்கு வயிறு வலிக்கிறது.
- நாளைக்கி ஒரு கத சொல்றியா?
  நாளை ஒரு கதை சொல்கிறாயா?

---

2. **பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களையும் எழுதுக.**

**(எ.கா.) சொல்லு - சொல் வந்தியா - வந்தாயா?**

**நில்லு - நில் சாப்ட்டியா - சாப்பிட்டாயா?**

- கேளு - கேள்
- ஆளு - ஆள்
- பாலு - பால்
- கொல்லு - கொல்
- பார்த்தியா - பார்த்தாயா
- கேட்டியா - கேட்டாயா
- போனியா - போனாயா

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பேசுவதும் கேட்பதும் மொழியின் .......... நிலை. **[முதல்]**
2. எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் மொழியின் ............ நிலை. **[இரண்டாம்]**
3. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது ......... மொழியே. **[பேச்சு]**
4. பேச்சு மொழியில் ............ கூறுகள் அதிகமாக இருக்கும். **[உணர்ச்சிக்]**
5. தமிழை ............ வழக்கு மொழி என்பர். **[இரட்டை]**

### குறுவினாக்கள்

1. **இரட்டை வழக்கு மொழி என்றால் என்ன?**
   - பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அது இரட்டை வழக்கு மொழி எனப்படும்.

2. **பல மொழிகள் தோன்றியதற்கான காரணம் என்ன?**
   - தொடக்க காலத்தில் மனிதர்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர்.
   - அவர்கள் தங்களுக்குள் தனித்தனியாக ஒலிக் குறியீடுகளை உருவாக்கிக் கொண்டனர்.
   - இதன் காரணமாகவே மொழிகள் பல தோன்றின.

விரிவானம்

இயல் ஒன்று

# ஆளுக்கு ஒரு வேலை
(பொம்மலாட்டம்)

## மதிப்பீடு

**பாடப்பகுதிப் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

**கதைத் தலைப்பு : ஆளுக்கு ஒரு வேலை**

- ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகாத சிறுவன் ஒருவனை அவன் அப்பாவும் அம்மாவும் படிப்பின் அவசியம் குறித்துக் கூறி பள்ளிக்கு அனுப்புகிறார்கள். அவனோ விளையாட யாராவது கிடைப்பார்களா என்று பள்ளியை விட்டு ஓடி வருகிறான்.
- எறும்பை விளையாடக் கூப்பிட்டான். நான் என் குழந்தைகளுக்கு அரிசி, நெய் எல்லாம் சேகரிக்க வேண்டும். அதோ அந்தத் தேனீயிடம் போய்க் கேள் என்றது எறும்பு. பூவெல்லாம் குறுகி மூடுவதற்குள் நான் தேன் எடுக்கச் செல்ல வேண்டும் என்று தேனீ கூறிவிட்டது.
- பொதி மாடு ஒன்றை விளையாடக் கூப்பிட்டதற்கு நான் என் முதலாளிக்கு உப்பு மூட்டை, புளி மூட்டை எல்லாம் சுமக்க வேண்டும், அந்த ஆமையுடன் போய் விளையாடு என்றது. ஆமையோ தான் முயலுடன் 'ஓடும் போட்டி' வைத்திருப்பதால் நேரத்தை வீணாக்காமல் நடக்க வேண்டும் என்று கூறி மறுத்தது.
- முயலிடம் சென்றான் சிறுவன். சென்ற முறை நிழலில் படுத்துத் தூங்கியதால் ஆமையிடம் தோற்றுவிட்டேன், இந்த முறையாவது நான் வெற்றி பெற வேண்டும் என்று கூறி விட்டது முயல்.
- விளையாட எவரும் கிடைக்காததால் சிறுவன் அருகில் இருந்த குட்டிச்சுவரின் மேல் ஏறிக் குதித்துக் குதித்து விளையாடினான். ஏற்கனவே மழையில் ஊறி இருந்த அந்தப் பழைய சுவர் இடிந்து விழுந்தது. அதில் இருந்த பூச்சி , எறும்பு வண்டு எல்லாம் வெளியே வந்தது. தாங்கள் பாடுபட்டுச் சேர்த்து வைத்த பொருளை எல்லாம் இப்படிச் சிதற விட்டு விட்டாயே என்று கோபத்தில் அவன் கை கால்களில் கடித்தன.
- வலி பொறுக்க முடியாத சிறுவன் அலறி அடித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான். 'உலகத்தில் எல்லோரும் அவரவர் வேலையைப் பார்க்கிறார்கள். ஈ, எறும்பு கூட வேலை செய்கிறது. என்னுடைய வேலை படிப்பது தான் என்று எனக்குப் புரிந்து விட்டது. இனிமேல் நானும் பள்ளி சென்று ஒழுங்காகப் படிக்கப் போகிறேன் என்று தன் பெற்றோரிடம் கூறினான் சிறுவன்.

## கற்பவை கற்றபின்

1. **உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.**

- ஏழை சொல் அம்பலம் ஏறாது
- குரைக்கிற நாய் கடிக்காது.
- அடியாத மாடு படியாது.
- குருவி தலையில் பனங்காயை வைக்கலாமா?
- ஆடுகிற மாட்டை ஆடித்தான் கறக்க வேண்டும். பாடுகிற மாட்டை பாடித் தான் கறக்க வேண்டும்.
- ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுதுச்சாம்.
- காடு வா வாங்குது; வீடு போ போங்குது.

---

2. **பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

(எ.கா.) குத்துக்கல்லுக்குக் குளிரா வெயிலா என்பதுபோல் என் நண்பன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தான்.

- ‘அடை மழை விட்டாலும் செடிமழை விடாது’ என்கிற மாதிரி அறிவுரை சொல்லிட்டுப் பாட்டி நகர்ந்தாலும் என் அம்மா தொடர்ந்தார்.
- ‘வெளைச்சலுக்கும் வெள்ளாட்டுக்கும் சென்மப்பகை’ என்கிற மாதிரி என்னிடம் பணம் சேரவில்லை என்று புலம்பினார் அப்பா.
- ‘அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது’ ங்கிற மாதிரி ஒழுக்கக் கேட்டால் வந்த கெட்ட பெயர் வருத்தப்படுவதால் மாறாது.
- ‘எறும்பு ஊரக் கல்லும் தேயும்’ என்பது போல அடுத்தடுத்த முயற்சிகளால் என் தங்கை சுற்றுலா செல்ல என் பெற்றோரிடம் அனுமதி பெற்றாள்.
- ‘சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா’ என்பது போல பகட்டுப் பேச்சினால் பணம் சேராது, உழைத்தால் தான் சேரும் என்றார் அப்பா.

கற்கண்டு

# இயல் ஒன்று

# குற்றியலுகரம், குற்றியலிகரம்

## மதிப்பீடு

### கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து

| | | |
|---|---|---|
| **நெடில் தொடர்** | **உயிர்த்தொடர்** | **மென்தொடர்** |
| ஆறு, ஏடு, காசு | விறகு | கரும்பு, பந்து |
| **ஆய்தத் தொடர்** | **வன்தொடர்** | **இடைத்தொடர்** |
| எஃகு | உழக்கு, எட்டு | கொய்து |

### பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.

1. பசு, விடு, ஆறு, கரு - **ஆறு**
2. பாக்கு, பஞ்சு , பாட்டு, பத்து - **பஞ்சு**
3. ஆறு, மாசு, பாகு, அது - **அது**
4. அரசு, எய்து, மூழ்கு, மார்பு - **அரசு**
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு - **எஃகு**

### குறுவினா

1. **‘குற்றியலுகரம்’ என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**
   - குற்றியலுகரம் - குறுமை + இயல் + உகரம்.
   - தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரமாகும்.

2. **குற்றியலிகரம் என்றால் என்ன?**
   - தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.
   - (எ.கா.) **கொக்கியாது, கேண்மியா**

## தெரிந்து தெளிவோம்

தமிழில் எழுத்துகளைக் குறிப்பிடுவதற்கு கரம், கான், காரம், கேனம் ஆகிய எழுத்துச் சாரியைகளைப் பயன்படுத்துகிறோம்.

- குறில் எழுத்துகளைக் குறிக்க 'கரம்', 'காரம்', 'கான்' (எ.கா.) **அகரம், மகரம், மகாரம், மஃகான்**
- ஐ, ஔ எழுத்துகளைக் குறிக்க 'கான்' (எ.கா.) **ஐகான், ஔகான்**
- நெடில் எழுத்துகளைக் குறிக்க 'காரம்' (எ.கா.) **ஆகாரம், ஏகாரம், ஐகாரம், ஔகாரம்**
- ஆய்த எழுத்தைக் குறிக்க 'கேனம்' (எ.கா.) **அஃகேனம்**

**'வ்'** என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.

மேலும் **சு, டு, று** ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை.

## கற்பவை கற்றபின்

1. **ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப் பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள்; அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.**

ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு எட்டு ஒன்பது பத்து.

குற்றியலுகரச் சொற்கள்

ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு எட்டு ஒன்பது பத்து.

2. **குற்றியலுகர எண்ணுப் பெயர்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

- நெடில்தொடர் - ஆறு
- உயிர்த்தொடர் - ஒன்பது
- வன்றொடர் - எட்டு, பத்து
- மென்றொடர் - ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து

3. **குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்.**

- ஒன்று - 1 + 1/2 + 1/2 = 2
- இரண்டு - 1 + 1 + 1/2 + 1/2 = 3
- மூன்று - 2 + 1/2 + 1/2 = 3
- நான்கு - 2 + 1/2 + 1/2 = 3
- ஐந்து - 2 + 1/2 + 1/2 = 3
- ஆறு - 2 + 1/2 = 2 1/2
- எட்டு - 1 + 1/2 + 1/2 = 2
- ஒன்பது - 1 + 1/2 + 1 + 1/2 = 3
- பத்து - 1 + 1/2 + 1/2 = 2

4. **கு, சு , டு, து, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.**

- பாகு, மாசு, பாடு, காது, ஆறு.

# கூடுதல் வினாக்கள்


## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பாடு என்பது ............ தொடர்க் குற்றியலுகம். [நெடில்]
2. வரலாறு என்பது ........... தொடர்க் குற்றியலுகரம் [உயிர்த்]
3. பந்து என்பது ............ குற்றியலுகரம் [மென்தொடர்க்]
4. குற்றியலிகரம் தற்போது ............ வழக்கில் இல்லை. [உரைநடை]

## குறுவினாக்கள்

1. **குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை
   - நெடில் தொடர்க் குற்றியலுகரம்.
   - ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
   - உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
   - வன்தொடர்க் குற்றியலுகரம்
   - மென்தொடர்க் குற்றியலுகரம்
   - இடைத்தொடர்க் குற்றியலுகரம்

2. **முற்றியலுகரம் என்றால் என்ன?**
   - தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.
   - வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும்.
   - இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.



# மொழியை ஆள்வோம்

## கேட்க.

தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்க.

## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

**நான் அறிந்த பழமொழிகள்**

- தாய் சொல்லைத் தட்டாதே
- தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
- எறும்புஊரக் கல்லும் தேயும்
- ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்
- நாய் வாலை நிமிர்த்த முடியுமா?
- உரலுக்கு ஒருபுறம் இடி; மத்தளத்துக்கு இருபுறமும் இடி
- ஊமை கனாக் கண்டது போல
- முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப் படலாமா?
- ஆறிலும் சாவு! நூறிலும் சாவு!
- பதறாத காரியம் சிதறாது
- அடிக்கிற அடியில் அம்மியும் நகரும்
- அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்
- தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை.
- கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையலாமா?
- பாத்திரம் அறிந்து பிச்சை இடு
- அழுதாலும் பிள்ளை அவள் தானே பெற வேண்டும்?
- மதியாதார் தலைவாசல் மிதியாதே!
- பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்
- பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து
- மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே!

இவையெல்லாம் கிராமத்து பெரியவர்கள் மூலம் நான் அறிந்த பழமொழிகள். அத்தனையும் மூத்தோரின் அனுபவ மொழிகள்

## கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

**தாய்மொழிப்பற்று**

**(முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப் பற்று - தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் - நமது கடமை - முடிவுரை)**

**முன்னுரை:**

**''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**

**இனிதாவது எங்கும் காணோம்''** என்றான் பாரதி. நம் உணர்வுகளை எழுத்தாக, பேச்சாக தாய் மொழியில் மட்டுமே முழுமையாக வெளியிட முடியும். தாய்மொழிப் பற்று இல்லாத மனிதர்கள் இருக்க முடியாது. தாய்மொழிப் பற்றுக் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**மொழி பற்றிய விளக்கம்:**

நம் எண்ணத்தை வெளியிட உதவுவது மொழி. அது பேச்சு மொழி, எழுத்து மொழி என இரு வகைப்படும். ஒலிக் குறியீடுகளே மொழி ஆயின. பல்வேறு சமூகக் கூட்டங்களாக மனிதன் வாழ்ந்த காரணத்தால் பல மொழிகள் பிறந்தன.

**தாய்மொழி:**

கருவில் வளரும் குழந்தை ஏழு மாதத்திலேயே ஒலிகளைக் கேட்கத் தொடங்கி விடுகிறது. பிறந்தது முதல் ஒரு குழந்தை பேசத் தொடங்கும் மொழியே அதன் தாய் மொழி ஆகும். தாயே குழந்தையின் முதல் ஆசிரியர் என்பதால், குழந்தையின் நாவிலிருந்து வரும் ஒலிக் குறியீடுகள் தாய்மொழி எனப்பட்டன.

**தாய்மொழிப்பற்று:**

தாய்மொழி வழிக் கல்வியே குழந்தையின் ஆளுமைத் திறனை முழுமையாக வெளிக்கொணர்கிறது என்று யுனெஸ்கோ தெரிவித்துள்ளது. வளர்ந்த பின் பல்வேறு மொழிகளைக் கற்கும் வாய்ப்புப் பெற்று இருந்தாலும் அன்பால் கலந்த உறவுகளோடு பேசுவதற்குத் தாய்மொழியே முதன்மை பெறுகிறது.

**தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர்:**

இறைவனே அடியெடுத்துக் கொடுக்கப் பெரியபுராணம் பிறந்தது. நீண்ட நாள் உயிர் வாழ உதவும் அதிசய நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்தவன் அதியமான். முரசுக் கட்டிலில் உறங்கிய மோசிகீரனாருக்குக் கவரி வீசினான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்று தன் கல்லறையில் எழுதச் சொன்னவர் ஜி.யு.போப். கலம்பகம் பாடினால் இறப்பது உறுதி என்று தெரிந்தும் பாடச் சொல்லிக் கேட்டபடி உயிர் துறந்தான் நந்திவர்மன்.

**நமது கடமை:**

பிப்ரவரி 21 அனைத்து உலகத் தாய்மொழி தினமாகும். அவரவர் தாய்மொழியிலேயே பிற மொழிக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும். நம் படைப்புகள் தாய் மொழியிலேயே அமைவது சிறப்பு.

**முடிவுரை:**

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்றார் பாரதிதாசன். உணர்வோடு ஒன்றிய தாய்மொழியே நம் உயர்வுக்கு உதவும். இலக்கண வளமும் இலக்கியச் செறிவும் கொண்ட நம் தாய் மொழியாம் தமிழை வளர்ப்போம்! தரணி ஆள்வோம்!

## மொழியோடு விளையாடு

### தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

| | | |
|---|---|---|
| **(எ.கா.) இருதிணை** | : | உயர்திணை, அஃறிணை |
| **முக்கனி** | : | மா, பலா, வாழை |
| **முத்தமிழ்** | : | இயல், இசை, நாடகம் |
| **நாற்றிசை** | : | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு |
| **ஐந்திணை** | : | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| **அறுசுவை** | : | இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு |

## இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.

**(எ.கா.)** அரசுக்குத் தவறாமல் **வரி** செலுத்த வேண்டும்.

ஏட்டில் எழுதுவது **வரி** வடிவம்.

1. மழலை பேசும் **மொழி** அழகு.
   இனிமை தமிழ் **மொழி** எமது.
2. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை **நடை** பழகும்.
   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்கு மொழி **நடை**.
3. நீ அறிந்ததைப் பிறருக்குச் **சொல்**.
   எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொல்**.
4. உழவர்கள் நாற்று **நட** வயலுக்குச் செல்வர்.
   குழந்தையை மெதுவாக **நட** என்போம்.

## நிற்க அதற்குத் தக..

**என் பொறுப்புகள்**

1. கடிதங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதும்போது திருத்தமான மொழி நடையையே கையாள்வேன்.
2. பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற நாட்டுப்புறக் கலைகளைப் போற்றுவேன்.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | | | |
|---|---|---|---|
| **ஊடகம்** | Media | **பருவ இதழ்** | Magazine |
| **மொழியியல்** | Linguistics | **பொம்மலாட்டம்** | Puppetry |
| **ஒலியியல்** | Phonology | **எழுத்திலக்கணம்** | Orthography |
| **இதழியல்** | Journalism | **உரையாடல்** | Dialogue |



விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமுகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)


**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646
93453 14146 / 93453 30937

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

ICICI Bank iMobile BHIM pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay 94427 17794
63743 17883